# குறள் நெறி இசையமுது

ப.கண்ணன்

தென்றல் வெளியீடு 20.

# குறள்நெறி இசையமுது.

## திருக்குறள்
## விளக்கப்பாடல்கள்

இரண்டாம் பகுதி.

ஆசிரியர்:

ப. கண்ணனார்.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம். சேலம் மாவட்டம்.

முதல்பதிப்பு: வள்ளுவராண்டு 1998 மார்கழி.
ஆங்கிலம் 1967 டிசம்பர்.

அறத்துப்பாலில் 10
பொருட்பாலில் 17
இன்பத்துப்பாலில் 6

ஆக, 33 அதிகாரங்களுக்கான
33 இசைப்பாடல்களைக் கொண்டது.

பாடல்களின் உரிமைகள் யாவும்
ஆசிரியருக்கே உரியவை.

விலை 0-75

# நலம் மிகப் பெரிதே.

திருக்குறளினை இசைப்பாடல்களில் அமைத்துள்ளார் திரு. கண்ணனார். திருக்குறளைத் துய்ப்பதற்கு இசையும் பயன்படும்போது வினையும் பயனும் மிகப்பெரிதே ஆம். இசைவாணர்கள் இந்த நூலைப் பயன்படுத்துவார்கள் என நம்புகிறேன்.

*பேராசிரியர்,*

**தெ. பொ. மீனாட்சி-சுந்தரனார்.**

*துணைவேந்தர்,*

*மதுரைப்பல்கலைக் கழகம்,*

*மதுரை.*

## மிகவும் சிறப்பு.

" உயர்திரு, செந்தமிழ்ச்செம்மல், ப. கண்ணனூர் அவர்கட்கு, மிக்க வணக்கம். நன்றி. குறள்நெறி இசையமுதினைப் படித்தேன். சுவைத்தேன். குறள் மணம் பரப்பத் தாங்கள் வகுக்கும் செயல்முறை மிகவும் சிறப்புடையதே!"

திருக்குறள், சி. முனிசாமி,
விழுப்புரம், 15-9-67.

தலைவர், குறள்வளர்ச்சிப் பணிமனை.

## பயனுள்ள நிகழ்ச்சி.

முத்தமிழ் முப்பால் என்ற இந்தக் கலை நிகழ்ச்சியானது, இயல் இசை கூத்து முறையில் திருக்குறளின் கருத்துக்களை சுவையோடு வழங்குகிறது. பாடல்கள் யாவும் தனித் தமிழிலும், தமிழிசை முறையிலும் ஆக்கப்பட்டிருக்கின்றன. பாடல்கள் இனிமையானவை. பாடப் பாடப் புதிய மெருகு பெறக் கூடியவை. பாடகரும், நாட்டியச் செல்வியும் வெகு சிறப்பாகத் தமது கடமையை நிறைவேற்றினார்கள். திருவாளர், கண்ணனூர் கொடுத்த கருத்து விளக்கம் மிக்க நன்று. இது நாடெங்கும், வெளிநாட்டிலும் நடைபெறவேண்டிய பயனுள்ள நிகழ்ச்சியாகும்

சலகை-கண்ணனூர் நல்ல எழுத்தாளர்; நாடக ஆசிரியர். இவரது "நந்திவர்மன்" நாடகத்தை நான் பார்த்துப் பாராட்டியுள்ளேன். இவர் இசைத் துறையிலும் வல்லவர் என்பதை இன்று நான் காண்கிறேன். முத்தமிழிலும் வல்ல இவரை முத்தமிழ்க்கண்ணனூர் என்றே நாம் அழைக்கலாம்.

பேராசிரியை. காமாட்சி-குமாரசாமி M.A;
23-9-67-ல் சேலம் பொருட்காட்சிக் கலையரங்கில்.

# அழகான கலை வடிவம்.

சலங்கை, ப. கண்ணன் அவர்களின் குறள்நெறி கலைக்குழுவினர் நடத்திய இந்தக் குறள்நெறிக் கலையரங்கில் இனிய தமிழிசையும் இன்பத்துப் பால் நாட்டியமும் சுவைத்தோம். இது வெறும் பொழுதுபோக்கல்ல; குறள் வகுத்தளித்த தமிழ் நெறியை எவருக்கும் புரிகின்ற முறையில் விளக்கு கிறது, இந்த அரிய கலை நிகழ்ச்சி.

கலைகளிலேபுதிய கருத்துக்கள், சமுதாயத்தை முன்னேற்றும் எண்ணங்கள் இடம்பெறவேண்டும் என்கிற அறிஞர் அண்ணா அவர்களின் விருப்பத்தை இந்தக்கலையாக்கம்பூர்த்திசெய்வதாகஇருக்கிறது. குறள்நெறி வளர்க்க திரு. கண்ணனுக்கு இப்படி யொரு எண்ணம் தோன்றியதே பாராட்டுக்குரிய தாகும்.

திருக்குறளைப்படைத்த திருவள்ளுவரே இந்தக் கலைநிகழ்ச்சியைப் பார்த்திருப்பாரானால், "நமது குறளுக்கு இப்படியொரு அழகான கலை வடிவம் கொடுக்க முடிந்திருக்கிறதே!" என்று மூக்கின்மேல் விரலை வைத்திருப்பார்!

காஞ்சி என். கிருஷ்ணன் M.A.B.L; M.L.A.

காஞ்சியில் 30-9-67-ல் பேரறிஞர் அண்ணா

பிறந்தநாள் விழாவில்.

# தமிழிசையை வளர்ப்போமாக.

தமிழ் நாட்டில் பிறமொழியாரின் ஆட்சி நடைபெற்ற பிற்காலத்திலும், தமிழகத்து மற்றக் கலைகள் போற்றப்பட்டு வந்தது. தெலுங்குப் பாடல்களும் வடமொழிப் பாடல்களும் தமிழ் இசை மரபையொட்டியே பாடப்பட்டு வந்தன. பெயர் புதிது; ஆயினும் மரபு பழையதாக இருந்து வந்தது.

தமிழகத்தில் குடியேறி வாழ்ந்த மற்ற மொழியார்க்குத் தமிழ்ப் பாடல்கள் அவ்வளவாகப் பயன் தரவில்லை. பாடுவோர், கேட்போர் தம் உள்ளத்தைத் தொடும்வகையில் இசையை நுகர்வதற்கு, அவரவர்களின் தாய்மொழியில் அமைந்த பாடல்களே (சாகித்தியங்களே) தேவையாயின.

ஆகவே, தமிழ் நாட்டில் குடியேறிய பிறமொழியார் தம் தாய்மொழியிலேயே பாடல்களைப் போற்றுவாராயினர். அவற்றில் பல மிக உயர்ந்த பாடல்களாகவும் விளங்கின. ஆனால் பிறகு வந்த தமிழர் சிலர் தம் தம் தாய்மொழியே இசைப் பாடல்களுக்கு ஏற்றது என்ற உண்மை தெரியாமல், தெலுங்கு மொழி ஒன்றே இசைக்கு உரியது என்று மயங்கினார்கள். அந்த மயக்கம்தான் இங்கும் ஏற்பட்டது.

"வித்துவான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணி புராதன வழிகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால், தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளின் பழம் பாட்டுக்களை மீட்டும் மீட்டும் சொல்லுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி ஸங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்" என்று கவிஞர் பாரதியார் செய்த எச்சரிக்கை இன்று தகுந்த பயனை விளைத்திருக்கிறது.

இசை ஓர் உயர்ந்த கலை. அது மொழியைக் கடந்தது. இசைப் பாடல்கள் இசை நுகர்ச்சிக்குத் துணை செய்கின்றன. அந்தப் பாடல்கள் தமிழில் அமைந்தவைகளாக இருந்தால் தமிழர் இசையை நுகரமுடியும். இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு தமிழிசையை வளர்ப்போமாக.

**—மு. வரதராசனார்.**

*தமிழிசைச் சங்கம் வெள்ளி விழாக்கட்டுரை.*

# முன்னுரை.

"குறள்நெறி இசையமுது" முதற்பகுதி நூல் வடிவுபெற்று எட்டுத்திங்களுக்குப்பிறகு இரண்டாம்பகுதிவெளிவருகின்றது.

இந்த இடைவெளியில் பாடல்களைப் படித்தவர்களும், சுவைத்தவர்களும் தந்த கருத்துக்கள்; எனது நம்பிக்கைச் சுடரைத் தூண்டி விடுவதாயிருக்கின்றன.

பாடல்களும், கருத்துக்களும் பரவிட நானும், இசைவாணர் டி. பி. பாலகிருஷ்ணன் அவர்களும், குறள்நெறி கலைக் குழுவினரோடு இசையரங்கும், நாட்டிய அரங்கும் நடத்தி வருகிறோம்.

இந்தப்பணி எங்களால் மட்டும் நிறைவேறுவதன்று. தகுதி படைத்த முத்தமிழ்க் கலைஞர்களின் நல்லாதரவு வேண்டும். இப்பாடல்களை இசையரங்குகளிலும், வானொலியிலும் பாடுவதாகப் பலர் வாக்களித்துள்ளனர். வானொலி நிலையத்தினர்க்கும் பாடுதற்கான ஒப்புதல் கொடுத்துள்ளேன். எதற்கும் தமிழ்ப் பெருமக்களின் ஆதரவு தேவை.

தமிழிசைச் சங்கத்தின் வெள்ளிவிழாக் கொண்டாடும் பொழுது இந்நூல் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். எனவே பேராசிரியர், மு. வரதராசனார் அவர்களின் கட்டுரைப் பகுதியும் இதிலே இடம் பெறுகின்றது.

கண்டும் படித்தும் கருத்துரை வழங்கிய அறிஞர் பெருமக்கள் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், திருக்குறள் வி. முனிசாமி, பேராசிரியை காமாட்சி-குமாரசாமி, வழக்குரைஞர் காஞ்சி, என் கிருஷ்ணன் மற்றும் பல நண்பர்களுக்கும், கலைஞர்களுக்கும் எனது பணிவன்பான நன்றி உரித்தாகுக.

சலகை<br>29-12-67

ப. கண்ணன்.



# போற்றி யகவல்.

ஞாயிறுபோற்றி
வான்மதிபோற்றி
மாயிருந்தலைவன்
மலரடிபோற்றி
தென்னகம்போற்றி
திருக்குறள்போற்றி
திருமறையீன்ற
தேன்தமிழ்போற்றி
மன்னுயிர்போற்றி
பொன்னவைபோற்றி
மாந்தன்நெறியின்
மாண்பிதுபோற்றி
தெள்ளியகுறளறம்
உலகெலாம்போற்ற
வள்ளுவர்தம்பதம்
வாழ்த்திவணங்குவமே.

# 1. செய்ந்நன்றி அறிதல்.

அறத்துப்பால். அதிகாரம்-11

இராகம்-ஆனந்த பைரவி. தாளம்-ஆதி

எடுப்பு.

நன்றியை மறப்பது நன்றல்ல நண்பனே!
நன்றல்லதை யன்றுடன் மறந்திடுக-செய்த (நன்)

தொடுப்பு.

கொன்றன்ன இன்னுதவை செய்யினும்
அவர்செய்த
ஒன்று நன்றெண்ணுக வந்தசினம் மறையும்(நன்)

படுப்பு.

காலத்தினுல் செய்த நன்றிசிறி தெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிதல்லவோ?

முடிப்பு.

சீலத்தின் செம்மையிது செய்ந்நன்றி மறவாதே
சிந்தையில் கொள்ளாமலே நிந்தனை யடையாதே
(நன்)

சந்தம்.

தினைத்துணைவுதவியைப் புரியினும் தூயவர்
பனைத்துணையளவென சாற்றுவரே.

வினைத்துணையதனிலே தனக்குறுபயனதை
நினைப்பறுநலமதைப் போற்றுவரே

எந்த நன்றியைக் கொன்றவர் தனிலும்
செய்த நன்றியைக் கொன்றவர் தீயவர்

என்பதே—அறம்—நண்பனே—இதில்
உன்மனம்—தினம்—பண்படும்—வகை

இக்குறள் நெறியினை நற்றமிழி சையினில்
வைப்பது கண்ணனின் விருப்பமே.

தக்கவர் பாடிடக் கற்றவர் நினைவினில்
மிக்க எழிலுடன் இருக்குமே-சிறக்கும். (நன்)

## 2. நடுவு நிலைமை.

அறத்துப்பால். அதிகாரம்-12

இராகம்-அடாணா. தாளம்-ரூபகம்

எடுப்பு.

நடுவுநிலைமை தவருதே—எந்த
நாளிலும் எந்த நிலையிலும் மனமே—நீ (நடு)

தொடுப்பு.

கெடுதலும்வளம் வருதலும்வாழ்வின் இயல்பே
கேவலமில்லை வறுமைவரினும்
ஞாயமுள்ளது நலமா முலகில் (நடு)

படுப்பு.

தக்கார் தகவிலார் என்பதவரவர்
எச்சத்தால் காணப்படும்.

முடிப்பு.

மிக்க சமன்செய்து வைத்த துலாக்கோலைப்
போலே
ஒருபுறமதில் சாய்ந்திடாமல்
வருநிலையதில் சோர்ந்திடாமல் (நடு)

சந்தம்.

செப்பமெனும் நடுநிலைமை எப்பொழுதும்
பெருமைதரும்

ஒப்பிடுமே உலகமதும் ஓங்கிடுமே நினதுபுகழ்
(நடு)

வாணிப முறையிலும்
நடுநிலை பேணிடுவாய்—கணம்
நாணிடு பிறர்பொருள்
கருதிடல் தீவினையாம்—பெரும்

நன்மைபல வந்திடினும்
புன்மைநிலை கண்டுமெய்த்
தன்மையுள்ள நெறியிதனை
வன்மையுடன் கொண்டுநீ (நடு)

# 3. அடக்கமுடைமை.

அறத்துப்பால். அதிகாரம்-13.

இராகம்-ஆரபி. தாளம்-ஆதி.

எடுப்பு.

போகாதே முறைதவருய்—நண்பனே!
பொல்லாத ஆரவாரம் வெல்லாது எந்தநாளும்
(போகா)

தொடுப்பு.

யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் படுவார்
ஆகையினுலே (போகா)

படுப்பு.

தீயினுல்சுட்டபுண் உள்ளாறும் ஆருதே
நாவினுல் சுட்டவடு ஈதறிவாய்.

முடிப்பு.

வாயிலே தன்னடக்கம் செயலில் புலனடக்கம்
வலிவோடு காப்பவனே தெளிவானவாழ்வினன்
(போகா)

சந்தம்.

நிலையில்குறையாது அடங்கியவாழ்வது
மலையின்பெரிதாகும் உலகினிலே
கலையில்குறையாது திருக்குறள்நெறியினில்
கண்ணன் இசைபாடும் முறையினிலே
காக்கப் பொருளென அடக்கம்உயர்வது
ஆக்கம் தருவது எதற்கும்உரியது
கனிவுடனே பணிவுடமை
அணிவதுவே இனிமைதரும் (போகா)

# 4. ஒழுக்கமுடைமை.

அறத்துப்பால். அதிகாரம்-14.

இராகம்-நாட்டைக்குறிஞ்சி. தாளம்-ஆதி.

எடுப்பு.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்
என்றும் இடும்பைதரும் தீயொழுக்கம்-வழக்கம்
(நன்)

தொடுப்பு.

வென்றியுடன் ஒழுக்கம் காப்பவன் மேலோன்
வேதியன் ஆயினும் கெடுப்பவன் தீயோன் (நன்)

படுப்பு.

உலகத்தோடொட்ட ஒழுகல் கல்லார்
பலகற்றும் அறிவிலார் கருதிடுவாய்

முடிப்பு.

நலம் மிகவேபெறுவார் நற்புகழால் உயர்வார்
இலம் என்னும் நிலையிலும் இழிசெயல் புரியாதார்
(நன்)

சந்தம்

ஒழுக்கத்தில் வருவது மேன்மை-புலன்
விருப்பத்தில் நிகழ்வது தாழ்மை-நலன்
ஒழுக்கமுடையகுடி உயர்வினையுறுமதில்
இழுக்கமுடையதெனில் இழிபிறப்பாகும்
பகுத்தறிவுக் கண்ணன் குறள்நெறிப் பனுவலில்
வகுத்திடும் கருத்தினில் திளைத்திடு அனுதினம்
(நன்)

# 5. பிறனில் விழையாமை.

அறத்துப்பால். அதிகாரம்-15.

இராகம்-கேதாரம். தாளம்-ஆதி.

எடுப்பு.

பிறன்மனைவியை விரும்பாதே-தம்பி
பெரும்பழிவிளைந்திடும் கரும்பென இனித்தாலும்
(பிற)

தொடுப்பு.

அறன்கடைநின்றாருள் பிறன்கடை நின்றவன்
அறிவையும் புகழையும் இழப்பவன் அதனாலே (பிற)

படுப்பு.

பகைபாவம் அச்சம் பழிஎனநான்கும்
இகவாவாம் இல் இரப்பவனிடமே

முடிப்பு.

வகையுடன் இல்லறம் வாழ்பவன் மேலோன்
வலியவேவாய்ப்பினும் நெறியிதை மறவாதே(பிற)

சந்தம்.

எனைத்துணையரேனும் இழிநிலைதருவதை
தினைத்துணையோராது பிறன்மனை புகுவதை
நினைக்கையில் குறள்நெறி இசைபாடு-தம்பி
உனக்கிது அரும்பெறும் துணையாகும்-நம்பு
எளிதெனநினைத்து இல்லிரப்பவனொடு
பழியதுநிலைத்து பலதுயர்பெருகிடும் (பிற)

## 6. பொறையுடைமை.

அறத்துப்பால். அதிகாரம்-16.

இராகம்-காம்போதி. தாளம்-ரூபகம்.

எடுப்பு.

நிறையுடைமை யெனும் பெருமையை
அடைய விரும்பினல்—தம்பி,
பொறை யுடைமையைப் போற்றிவாழும்
வலிமை யுனக்கு என்றும் வேண்டும் (நிறை)

தொடுப்பு.

முறையில்லாதவை செய்திடுவார்
தரும் வருத்தமே
முறைமை பொறுமை யுடனேமறந்து
வென்றிடுவாயே (நிறை)

படுப்பு.

ஒறுத்தார்க்கொரு நாளைய இன்பம் அன்பால்
பொறுத்தார்க்குப் பொன்றுந்துணை புகழாமே

முடிப்பு.

வெறுத்தெவருமே செருக்குடன்
இகழ்ந்துரைப்பினும்

வெட்டுவோரைத் தாங்கிவிளைவுதருகும்
நிலத்தைப்போலே (நிறை)

சந்தம்.

இன்மையுள் இன்மை விருந்திட மறுப்பதே
வன்மையுள் வன்மை கொடியரைப் பொறுப்பதே
உண்மையில் செம்மையின் செயலிது
நன்மையுள் நன்மையைப் புரிவது
கண்ணனின் குறள்நெறிப் பனுவலில்
எண்ணரும் பொறுமையும் பெருகிடும்(நிறை)

# 7. அழுக்காறாமை

அறத்துப்பால். அதிகாரம்-17.

இராகம்-பிலகரி. தாளம்-ஆதி.

எடுப்பு.

அழுக்காறது வேண்டாம்—நண்பா!
அறிவினைத்தேய்ப்பது அன்பினை மாய்ப்பது(அழு)

தொடுப்பு.

ஒழுக்காறாய்க் கொள்க அழுக்காறிலாத பண்பை
ஒன்னலர் பகைவென்று ஓங்குயர் நிலைபெற(அழு)

படுப்பு

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்செவ்வியான்
கேடும் நினைக்கப்படும் நாளடைவில்,

முடிப்பு.

எவ்விதமாயினும் இழுக்கானதுபொறாமை
ஏதம்பலவிளைத்துச் சோதனையில் சேர்க்கும்(அழு)

சந்தம்.

பொறாமை யடைவதில் இறமிலையே
இலாமை வருமது முறையலவே
விடாது குறள்நெறி நாடுகவே
கெடாது தமிழிசை பாடுகவே
அறனதன் உறுபினை அறியா துலகினில்
பிறனது உயர்வினை பேணு தொழுகிடும் (அழு)

# 8. வெஃகாமை.

அறத்துப்பால். அதிகாரம்-18

இராகம்-கமாஸ். தாளம்-அடை

கண்ணிகள்.

1. நடுவின்றிப் பிறர்பொருள் கவராதே-நல்ல
குடிபொன்றிப் பழிமிஞ்சித் திரியாதே
படுபயன் பெரிதென்றே கருதாதே-அதன்
கெடுதலை ஒருபோதும் மறவாதே.

2. சிற்றின்பம் சிறுவுணர்வின் விளைவாமே-அதனை
மற்றின்பம் விழைகுவோர் விரும்பாரே
பெற்றிடுவம் செல்வமென முனையாதே-அந்த
வெற்றியிலே திருமகளும் இணையாளே.

3. இலமென்றே கவர்ந்திடல் இழிவாகும்-இது
புலன்வென்ற தூயவர்கள் வழியாகும்
பலனேதும் குற்றமதில் குறையாகும்-கன்ம
மலமாசும் தொலையாமல் ஆணையாகும்.

4. வசைதன்னை நினையாமல் துணியாதே-நல்ல
வாழ்வுநலம் பாழ்படுமே திருடாதே
இசைபெறும் கண்ணன்குறள் நெறியாலே
-வரும்
இன்பநிலை தானடைதல் முறையாமே.

# 9. புறங்கூறாமை.

அறத்துப்பால். அதிகாரம்-19.

இராகம்-சகானா. தாளம்-ரூபகம்.

எடுப்பு.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தல் அழகல்லவே
அறங்கூறும் நெறியினை மறந்து—இகழ்ந்து (புற)

தொடுப்பு.

பிறன்பழி கூறுவோரின் பெரும்பழியைப் பிறரும்
திறனறிந்தே உரைப்பார் முகனமர்ந்தே
நகைப்பார் (புற)

படுப்பு.

ஏதிலார்குற்றம்போல் தம்குற்றம்காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கெல்லாம்.

முடிப்பு.

ஓதியுணர்ந்தவற்றில் உரையாடி மகிழாமல்
ஒன்றிய நட்பினையே கொன்றேபிரிப்பதான (புற)

சந்தம்.

கண்ணெதிர் நின்று கடியபேசினும்
பின்னிடம் சென்று பழிக்காதே

பண்ணிசை தன்னில் கண்ணண் குறள் நெறி
பாடிப்பயின்றிட மறக்காதே

நெருங்கிப் பழகியோர் குறைதனைப் பெரிதாய்
விரும்பித் தூற்றுதல் முறையல்லவுலகில் (புற)

# 10. கொடுங்கோன்மை.

பொருட்பால். அதிகாரம்-56.

இராகம்-தோடி. தாளம்-ரூபகம்.

எடுப்பு.

கொலையால் வாழ்வானிலும் கொடியன்
கொடுங்கோலரசது புரிந்திடுபவன் (கொ)

தொடுப்பு.

தலையான அறங்கள் தடுமாறிப்போக
நிலையானமுறையின்றி குடிகளைவதைப்போன்
குலையாத மாமலை போன்றவனாயினும்
கோலதுவும் மிகுபொருளும்
காலமதில் இழந்திடுவான். (கொ)

படுப்பு.

அல்லற்பட்டாற்று தழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படையாம்.

முடிப்பு.

நல்லறநீதிகள் கல்லாதான் ஆட்சியில்
நில்லாதுநன்மையும் பெய்யாது வானமும்
பொல்லாதகேடுகள் பொங்கிவருகுமே

பொருளிலவாம் வறுமையினும்
துயர் தருமே பெருஞ்செல்வம் (கொ)

சந்தம்

வேலேந்தியே கொள்ளையிடும் கள்ளனோ?—நல்ல
கோலேந்திய மன்னவனின் தன்மையோ?
நூலேந்திய நல்லறிஞர் மதியேந்திடவே மறந்து
துட்டமனம் சுட்டியிடும்
கட்டளையால் கெட்டழிவான் (கொ)

# 11. வெருவந்த செய்யாமை.

பொருட்பால். அதிகாரம்-57

இராகம்-சிந்துபைரவி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. வெருவந்த செய்தொழுகும் வெங்கோலனாயின்
விரைவினில் அழிகுவான் ஒரு தலையே
செருவந்த போதினில் காவாத காவலன்
சிறுமையுள் புகழது பெருகிடுமோ.

2. கடுமொழியும் தண்டமும் கரை கடந்தாலே
அடுமுரண் தேய்த்திடும் அரமதுவே
கொடுங்கோல்மன்னவன் எனும்பெயர்
பெறுவது
கெடுவதைவிரைவினில் கொணர்வதுவே.

3 கல்லாரையேதனது துணையாய்க்கொண்டவன்
கடுஞ்செயல்புரிகுவான் கெடுங்காலம்
நில்லாது அமைதியும் நிலத்தாய்
பொறுமையும்
வெல்லாது பகையினை ஒருக்காலும்.

4. தக்காங்கு நாடித்தீய குற்றங்களுணர்ந்தே
தகிப்பதுபோல்சீறிக் குளிர்ந்திடுக
ஒத்தாங்குஒறுத்தல் வேந்தனுக்கழகாகும்
ஒருமனதாய்முறை தெளிந்திடுக.

# 12. கண்ணோட்டம்.

பொருட்பால். அதிகாரம்-58.

இராகம்-சிம்மேந்திரமத்திமம். தாளம்-ஆதி.

எடுப்பு.

உலகினைப் புரப்பது கண்ணோட்டம்-நல்ல
உளம்படைத் தார்க்கது கலைத்தோட்டம்-இந்த
(உல)

தொடுப்பு.

பலசுவைப்பனுவலில் இசைபொருந்தாவிடில்
பயனில்லையதுபோலே நயனில்லை கண்ணோடேல்
(உல)

படுப்பு.

கருமம் சிதையாமல் கண்ணோடவல்லார்க்கு
உரிமையுடைத்திந்த உலகாமே,

முடிப்பு.

பெருமனப்பாங்கிலே வருவது தாட்சண்யம்
அருளிதையறியதார் புரிவதில்லை நிச்சயம் (உல)

சந்தம்.

மண்ணோடியைந்த மரமதையனையவர்
கண்ணோடியைந்த கனிவறியார்
பண்ணோடியைந்த கண்ணன் குறள்நெறி
பாடலில் நிறைந்த மனதுடனே
குற்றமிழைத்தவர் குணநலம்நினைந்து
பெற்றநட்பினில் பிழையதனை மறந்து (உல)

# 13. ஒற்றாடல்.

பொருட்பால். அதிகாரம்-59
இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி

எடுப்பு.

ஒற்றாடுக மன்னா! உற்றநிலை தன்னை
இட்டமாய் உணருகவே-வெற்றிபெறவே (ஒற்)

தொடுப்பு.

கற்றாரின் நன்னூலும் ஒற்றாடும் சிலபேரும்
கண்ணெனப்பெற்றவனே நன்மைதனைப்-
பெறுவான் (ஒற்)

படுப்பு.

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழிலாகும்.

முடிப்பு.

நல்லாறு கண்டறிந்த நுண்ணறிவால்தெளிந்த
நாவடக்கம் துணிவும் காவலுக்குரியரால் (ஒற்)

சந்தம்.

வினைசெய்பவரொடு உறவினர்பகைவர்
அனைவரையும்ஆய்ந்து அறிந்திடுக
துணைதரும்செய்தியை வினவிமற்றவனின்
புனைபொருளுண்மையை தெளிந்திடுக
ஒற்றாடும் சிறப்பினை மறைபொருளாய்
வைத்தாளும் பொறுப்பினை நிறைவுடனே-
பெறுக (ஒற்)

## 14. ஊக்கம் உடைமை.

பொருட்பால். அதிகாரம்-60

இராகம்-ஆரபி. தாளம்-ஆதி

எடுப்பு.

ஊக்கம்கொள்க தம்பி ஊழையும் மிஞ்சி
ஓங்குவாய் உலகினிலே-மனதில் (ஊ)

தொடுப்பு.

ஆக்கம் வழிகேட்டு ஏகும் அசைவில்லா
ஊக்கம் உடையவன் வாழுமிடம் தேடி (ஊ)

படுப்பு.

வெள்ளத் தனையது மலர்நீட்டம் மாந்தர்
உள்ளத் தனையது உயர்வாமே.

முடிப்பு.

உள்ளுவதெல்லாமும் உயர்வன உள்ளுக
தள்ளினும் தள்ளாமை கொண்டிடல் வேண்டும்
(ஊ)

சந்தம்.

உடல்முழுது கணையின் வடுவினையடையினும்
குலையாக் கரியதுபோல்

இடரது பெருகிடும் பொழுதினும்மனமது
 தளரா நிலை பெறுவாய்

எண்ணுக குறள்நெறி தன்னில் வருவது
கண்ணன் பனுவலிது நன்மை தருவது

எப்பொழுதும் பாடிடுவாய்-கனிவுடன்
மெய்ப்பொருளை நாடிடுவாய்-இதமுடன் (ஊ)

★

# 15. மடி இன்மை.

பொருட்பால். அதிகாரம்-61

இராகம்-குந்தளவராளி. தாளம்-ஆதி

எடுப்பு.

மடிமை நீ கொள்ளாதே-மனமே
மாசுபடிந்து தீய நெறிபயக்கும்—மயக்கும் (மடி)

தொடுப்பு.

இடிபுரிந்தே ஒருவர் எள்ளிநகைக்கும் நிலை
மடிபுரிந்தார்பெறுவார் மாண்பினை இழந்தே (மடி)

படுப்பு.

நெடுநீர்மறவி மடி துயில்நான்கும்
கெடுநீரார் காமக் கலனுமே.

முடிப்பு.

மடிமையே நல்லதோர் குடியினில் பிறந்தானை
அடிமைபுகுத்தியந்த பெருமையினைக் குலைக்கும்
(மடி)

சந்தம்.

விடத்தகு சோம்பலை கடைப்பிடிப் பவனதன்
மடத்தன மொடுதுயர் படத்தகுமே
குடித்தனப் பாங்கினில் தடித்தனம் பெருகிடில்
கிடைத்திடும் நலமதைக் குலைத்திடுமே

பகுத்தறிவுக் கண்ணன் குறள்நெறிப்பாடலில்
வகுத்திடும் நன்னெறி வளம்பெறவுதவுமே (மடி)

# 16. ஆள்வினை உடைமை.

பொருட்பால். அதிகாரம்-62

இராகமாலிகை. ரூபகம்.

எடுப்பு—கல்யாணி.

செய்வதற்கரிதென சோர்வது கொள்ளாதே-எந்த
செயலிலும்தெளிந்து முயன்றுநீ வெல்லுக (செய்)

தொடுப்புகள்.

1. எய்துதற்கரியதும் எய்திடலாமே
ஏற்றமுறைதன்னில் செய்வதனாலே
தெய்வத்தினாலே ஆகாதவெனினும்
மெய்வருத்தக் கூலிதரும்
உய்வதற்கும் வேளைவரும் (செய்)

2. பிறர்க்குதவிசெய்து தனக்குதவிபெறல்
பொதுநலம்வளர உறுதுணையாமே
பெறர்க்கினியபண்பு பேணுகவாழ்விலே
பெற்றிடுக உயர்நிலையை
கற்றிடுக ஆள்வினையை (செய்)

3. கரியமூதேவியின் காதலனாவான்
காரியச்சோம்பலில் தூங்கிடுவோனே
திருமகளுறைவாள் மடியிலானகமே

பெருமைவரும் வாழ்வினிலே
அருமைமிகும் பாண்மையிலே (செய்)

4. முயற்சியேதிருவினை ஆக்குவபோலே
முயற்றின்மைஇன்மையை மூட்டுவதாமே
பயிற்சியிஞல்பெறும் தொழில்நலத்தாலே
பன்னலமும் தேக்கிவளர்
தன்னமும் போக்கிவுயர் (செய்)

5. ஊழையும்உப்பக்கம் காண்பவராவார்
உலைவின்றித் தாழாது முயன்றிடுவார்
கோழையை மாற்றிடும் குறள்நெறிக்
கண்ணன்
கொஞ்சுதமிழ்ப் பாவினிலே
நெஞ்சுவளம் மேவுகவே (செய்)

*
***
*

## 17. இடுக்கண் அழியாமை.

பொருட்பால். அதிகாரம்-63.

இராகம்-அடாணா. தாளம்-ஆதி.

எடுப்பு.

இடுக்கண்வருங்கால் நகுக—அதனை
அடுத்தூர்வதுவும் அஃதொப்பதில்லையே (இடு)

தொடுப்பு.

துடுக்கான துயரெல்லாம் கெடுக்கவே வந்தாலும்
மிடுக்காக வாழ்வதெனில் சளைக்காது வீரமொடு (இடு)

படுப்பு.

இன்பம் விழையாதான் இடும்பை
இயல்பென்பான்
துன்பம் வந்தபோழ்தில் துயரடையான்.

முடிப்பு.

வன்பில் கலங்காதான் வல்லமை மிகுந்தோனும்
வாழும் வகையுணர்ந்தே தாழும்வினை மறந்தே (இடு)

சந்தம்.

தனக்கு வருமெதும் இன்பம் எனவே
நினைக்கும் மனதினில் துயரேது?

வதைக்கும் பகையிலும் துன்பம் இலாமல்
சிறப்பு வருவதில் தடையேது?

அடுக்கிவரினும் அழிவிலானுற்ற
இடுக்கண் இடுக்கண் படுமதனால்

அறிவுதரும் குறள்நெறியில்—கண்ணன்
அழகுதமிழ் இசையமுதை-எண்ணி (இரு)

## 18. அமைச்சு.

பொருட்பால். அதிகாரம்-64.

இராகம்-நீலாம்புரி. தாளம்-சாபு.

எடுப்பு.

அருவினைவல்லதே அமைச்சாகும்-நல்ல
கருவியுங்காலமும் தேர்ந்திடும்மாண்பினில் (அரு)

தொடுப்பு.

வருமுன்னர்காப்பவர் வகையறிந்துரைப்பவர்
வளமாய்க்குடிகள்வாழ வழிபல உணர்ந்தாரின்
(அரு)

படுப்பு.

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான்கூறல் கடனாமே.

முடிப்பு.

நெறிகண்டநேர்மையன் நீதிநூலறிந்தவன்
திறன்கொண்டமதிநுட்பம் தேர்ந்துதெளிந்தாரின்
(அரு)

சந்தம்.

அறத்தில்முறைசெயும் தரத்தைமதிப்பவராய்-
நல்ல
அறிவின் வழியதில் ஆய்ந்து நடப்பவராய்

குணத்தில்கல்வியில் குறையில்லா தவராய்-மனம்
குறித்தசெயலினை முடிக்கும்வகையினராய்

இயற்கை அறிவொடு நூலின் அறிவதும்
இணைந்து உலகினை அறிந்துமே-தமிழ்

இசைக்கும் குறள்நெறி இயற்றும் வழியினில்
எதிர்ப்பின் இடையிலும் துணிந்துமே-செய்யும்
(அரு)

# 19. சொல்வன்மை.

பொருட்பால். அதிகாரம்-65

இராகம்-சண்முகப்பிரியா. தாளம்-சாபு

எடுப்பு.

சொல்வன்மை செல்வமென்பதுணர்க—தம்பி
வல்லமையோடு நன்மை
வளர்ந்திடும் ஈதுண்மை (சொ)

தொடுப்பு.

சொல்லுக வெல்லும்சொல்லே கேட்டாரைப்
பிணிப்பதாம்
சோர்வில்லா நன்மையாலே கேளாறும்
வேட்புறுவார் (சொ)

படுப்பு.

விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப்பெறின் அறிவாயோ?

முடிப்பு.

மலர்ந்தும் மணமில்லாத மலர்க்கொத்து
போன்றாரே
உணர்ந்தும் பலநூல்கள் உரைசொல்ல
இயலாதார் (சொ)

சந்தம்

ஆக்கமும் கெடுதலும் அறிவும் மடமையும்
அதனாலே வருமென்ப தறிக!

ஊக்கமோ டுரைதனில் பிழையும் பொய்மையும்
ஒருபோதும் கலவாது புரிக!

திறமறிந் தெதனையும் சொல்லுகவே-நல்ல
அறம் பொருள தனாலே வெல்லுகநீ-என்றும்

குறள்நெறிக் கண்ணன் பனுவல்பாடிடு
குணமுள்ள சொல்லின் விளைவைநாடிடு(சொ)

# 20. வினைத்தூய்மை.

பொருட்பால். அதிகாரம்-66.

விருத்தம்.

1. துணைநலம் ஆக்கம் தருகும் வினைநலம்
வேண்டிய வெல்லாம் தருமே
இணைவுறும் புகழது அறமொடும் வளருமே
ஏற்புடைய நல்வினை புரிகவே
கணையினில் தப்பிய மானது போலவே
களித்திரு தீவினை தவிர்த்தே.

2. இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சிய வரென்று
தொடுக்கும் திருக்குறள் தூயவாம் நெறியினில்
விழிப்புடன் வாழ்வதே வாழ்வதாம்
கெடுக்கும் பசியினால் ஈன்றவள் வருந்தினும்
கேடான வினையெதும் புரியாதே
அடுக்கும் வினையினில் அறிவொடு கலந்து
ஆன்றோரின் நட்பினைப் பெறுகவே.

3. அழக்கொண்ட வெல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பால வையென
தொழக்கொண்ட மெய்ஞானக் குறள்நெறி நடந்திடில்
துயரமும் பழியெதும் வருகுமோ?
உழக்கொண்ட பயிரினம் ஊக்கம் பெறுவது போல்
உயர்வுடைய முறைதனில் செழிக்கவே
விழக்கண்ட வாழ்வினை வீழாது காத்திட
வினைத்தூய்மை பெறுகவே விழைந்து.

## 21. வினைத்திட்பம்.

பொருட்பால். அதிகாரம்-67.
இராகம்-பேகாக். தாளம்-அடை.

எடுப்பு.

வினைத்திட்பமாவது மனத்திட்பமே
விறுடனே செய்க யாருக்கும் எப்போதும் (வினை)

தொடுப்பு.

எனைத்திட்பம் எய்திய போதும் பயனில்லை
வினைத்திட்பம் இல்லாரை விரும்பாதிவ்வுலகென்
றும் (வினை)

படிப்பு

எண்ணிய எண்ணியாங் கெய்துவரே
எண்ணியார் திண்ணிய ராகப்பெறின்.

முடிப்பு.

நுண்ணறிவாண்மை நுடங்காத மேன்மை
கண்ணெனக் கொள்பவர் காரியம் வெல்லுவர்
(வினை)

சந்தம்.

சொல்லுவது எவருக்கும் எளிதான ஒன்று
சொல்லியதைச் செய்வதுவே அரிதாகும் நன்று
எள்ளுவது கூடாது உருவத்தைக் கண்டு
ஏற்றசெயல் வல்லாரும் சிற்றுருவில் உண்டு
எண்ணமதில் தெளிவுடனே முயலுகவே-குறள்
கண்ணனிசைப் பாடலினைப் பயிலுகவே-வரும்
(வினை)

## 22. வினை செயல் வகை.

பொருட்பால். அதிகாரம்-68
இராகம்-இரவிச்சந்திரிகா: தாளம்-ஆதி

எடுப்பு.

வினைசெய்குவாய் விரைவாகவே
விளைவதனையே மனதெண்ணியே (வினை)

தொடுப்பு.

தினைபோன்றதும் பனையாகுமே
திறனுடைதனை புறம்போக்கவே (வினை)

படுப்பு.

பொருள்கருவிகாலம் வினையிடம்ஐந்தும்
இருள்தீரஎண்ணிச் செயலாகுமே.

முடிப்பு.

வருபகை வெல்ல பெறுவாய் உறவு
குறையினைக்கண்டு நிறைவினில்நின்று (வினை)

சந்தம்:

முடிவும் இடையூறும் பயனொடு—எய்தும்
முறையும் ஆராய்ந்து துணிவொடு
கடிதல் கடிவதையும் புரிவது—சூழ்ந்து
கருதும் வினையதை முடித்திடு
கலங்கி மெலிந்து மருளாதே
தெளிந்து முனைந்து அறிவாலே (வினை)

# 23. தூது.

பொருட்பால் அதிகாரம்-64

இராகம்-தன்யாசி, தாளம்-ரூபகம்

எடுப்பு.

தூதுரைப்பான் பண்பெதுவோ-யானுரைப்பேன்
தூய்மை துணைமை துணிவுடைமை (தூது)

தொடுப்பு.

ஏதுரைப்பான்நீதி நூலுரைப்பானவன்
ஏற்பன தொகுத்தும் இனியன மிகுத்தும் (துதூ)

படுப்பு.

இறுதிபயப்பினும் எஞ்சாதிறைவர்க்கு
உறுதிபயப்பதாம் தூதெண்பார்.

முடிப்பு.

அறுகியிட்டசொல்லால் ஆளுநர் கருத்தினை
அழுத்தம் திருத்தமாய் பொருத்தமுறச்சொல்லும்
(தூது)

சந்தம்

அன்புடைமை அறிவுடைமை ஆன்றகுடிப்
பேறுடைமை
பண்புடைமை பரிவுடைமை பகுத்தறிவுமிக
வுடைமை
தெண்புடைமை ஆய்ந்துரைக்கும் கல்வியதன்
நல்லுடைமை
தித்தித்திடும் வகையுடையான்
வெற்றிக்கொரு வழிபெறுவான் (தூது)

## 24. மன்னரைச் சேர்ந்தொழுகல்.

பொருட்பால். அதிகாரம்-70.

இராகம்-சாமா. தாளம்-ஆதி.

எடுப்பு.

அகலாதே அணுகாதே!— தீக்காய்வதுபோல்
இகல் வேந்தர் தம்மொடு சேர்ந்தொழுகுவாய்
நண்பா (அக)

தொடுப்பு.

புகலாது பயனின்மை வினவாதுபணிவோடு
போற்றிப்பின் திருத்துக ஏற்றவமைச்சராக (அக)

படுப்பு.

கொளப்பட்டோம் என்றெண்ணி கொள்ளாத
செய்யார்
துளக்கற்ற காட்சியவர் துணையவரே.

முடிப்பு.

விளக்குபோல் ஒளிகாட்டி வேட்பினில் தெளிவூட்டி
விருப்பினையறிந்துதன் பொறுப்பினை நினைந்து
(அக)

சந்தம்.

குறிப்பறிந்து காலமறிந்து இடனுமறிந்து எப்
பொழுதும்

விருப்பறிந்து விபரமறிந்து பயனுமறிந்து
செப்புகவே

திருக்குறள் நெறி கண்ணன் பனுவலை
சுவைத்தரசியல் பண்ணல் இனியது

இனையவர் உறவினர் எனஇகழாமல்
நிலையதன் தரமொடு பழகுதல்நலமாம் (அக)

## 25. குறிப்பறிதல்.

பொருட்பால். அதிகாரம்-71

சிந்து.

1. குறிப்பறியும் தன்மையினைப் பெற்றவர்—
இந்தக்
குவலயத்தை ஆளும்வகைக் கற்றவர்—நல்ல
குறிக்கோளின் வல்லமைதா னுற்றவர்—எந்த
குணமானவர் உளமாயினும்
கணமேயவர் அறிவார்திறன்
கொண்டவரே கடவுளென மற்றவர்—புகழ்
கொள்கையிலே தனக்குநிகர் அற்றவர்.

2 தன்னிடத்துவந்தபொருள் காட்டுமே—தூய
தண்பளிங்குபோலமனக் கோட்டமே—உற்ற
தன்கடுப்பை காட்டுமுகத் தோற்றமே—அந்தத்
தறமானதை அறிவாலுணர்
திறமானதைப் பெறலானவர்
தானமைச்சர் ஆகுவதைப் போற்றுமே—
இதைக்
தேனிகர்த்த தமிழ்மறையும் சாற்றுமே.

3 கெடுப்பதாம் செய்கையினைக் குறிப்பிலே--
கண்டு
கேட்பவர் வல்லவராம் பொறுப்பிலே—ஒன்று

கொடுத்துமே துணைகொள்வர் விருப்பிலே-
என்றும்
குறையாதுயர் மதிவாணரின்
முறையேநலம் சதிராடுமே
தொடுப்பதாம் கேடெதுவும் சிரிப்பிலே-
வைத்து
தோல்வியிலும் வென்றிடுவார் நெறிப்பிலே.

4. உவப்பதிலும்காய்வதிலும் வெடிக்குமே-முகம்
உணர்ச்சிமிகக் கொள்வதனல் நொடிக்குமே-
நெஞ்சின்
உண்மைகளைக் கண்களுமே வடிக்குமே-எந்த
உளமாயினும் அளவாகிடும்
உரையாதுரை விழியானவை
உய்த்துணரக் கண்ணனிசை முடிக்குமே-
தமிழ்
உயர்வதுவே குறள்நெறியில் துடிக்குமே.

*
* *
* * *
* * * *
* * * * *
* * * * * *

# 26. அவையறிதல்.

பொருட்பால். அதிகாரம்-72

இராகம்-தேஷ். தாளம்-ரூபகம்.

எடுப்பு.

அவையறிந்துபேசு நன்கு-தம்பி
தொகையறிந்துரையில் தூய்மைதேக்கியே (அவை)

தொடுப்பு.

சுவைமிகு சொல்லினில் எழில்மிகும் நடையில்
வகையினை உணர்ந்தே வலிவுடன் நல்லதை (அவை)

படிப்பு.

கற்றறிந்தார்கல்வி விளங்கும் கசடற
சொற்தெரிதல் வல்லாரகத்து.

முடிப்பு.

குற்றமில்லாரவை கற்றதைப்பேசுவோர்
மற்றவர்புல்லவை மறந்தும்சொல்லாதே (அவை)

சந்தம்.

கல்லாதவர் அவையினிலும் சொல்லாடிடும்
நிலையறிதல் மிகவினிதாம்

அல்லாதவர் அறிவுடையார் அவையினிலே
புகழ்பெறுதல் தனிநலமாம்
நூற்பொருளை நன்குணர்ந்த மேற்புலவர்
நல்லவையில்
ஏற்புடைய சொல்லுதலில் இழுக்கடைதல்
நன்றலவே
காப்பது கண்ணன் குறள்நெறி இசையமுதே
—இன்பம்
சேர்ப்பது திண்ணம் பாடிடு வசையறுமே—
என்றும் (அவை)

## 27. அவையஞ்சாமை.

பொருட்பால். அதிகாரம்-73.

இராகம்-சுருட்டி. தாளம்-ஆதி.

எடுப்பு.

அவை தனில் அஞ்சாமை வேண்டும்-தம்பி
அருள் பொருள் உரைப்பதில்
பெரும்புகழ் விளைத்திடும் (அவை)

தொடுப்பு.

பகையகத்தில் பேடிகை கூர்வாள்போன்றது
அவையகத்தில் அஞ்சுவான் பெற்றுயர்ந்த
கல்வியது (அவை)

படுப்பு.

கல்லாதவரின்கடை யென்பார் கற்றறிந்தார்
நல்லார் அவையஞ்சுவார் நயனில்லார்.

முடிப்பு.

சொல்லாடும் கல்விநலம் வல்லார்பேரவையில்
நல்லாண்மை காட்டாதார் வாழ்வதில் பயனேது
(அவை)

சந்தம்.

அளவை நூலறிந்து அவையினில் அமர்ந்து
மாற்றவர்க்குவிடை காட்டிடுக.
கல்வையோடறிவு செயலதாகும்நிலை
போற்றுதற்குரிய ஏற்றிடுக
கண்ணன் குறள்நெறிப் பனுவலிலே-புகழ்
வண்ணம்பெறுகுவெ அவையினிலே-மனம்
கற்றசெலச்சொலும் வன்மையிலே
உற்றசிறப்பெனும் தன்மையிலே (அவை)

## 28. அலர் அறிவுறுத்தல்.

இன்பத்துப்பால். அதிகாரம்-115.

இராகம்-சங்கராபரணம். தாளம்-ரூபகம்

எடுப்பு.

ஒருநாளே அவரைநான் கண்டேன்-பாங்கி
தெருவினில் பழி தூற்றுரர் பாரடி (ஒரு)

தொடுப்பு.

பெருகுதடிகாமம் உருகுதடிதேகம்
மருளுதடிமனம் மையலும் வளருதே (ஒரு)

படுப்பு.

ஊரவர் கெளவை எருவாய் அன்னைசொல்
நீராகநீளும் நோயிதுவோ?

முடிப்பு.

யாரடி நெய்யாலே நெருப்பையணைப்பது
கூறடிஅலர்கண்டு குறையுமோஆசையும் (ஒரு)

சந்தம்.

பேசிடும் அலரினில்காதல் பெருகிவளர்ந்துருவாகி
கூசிடும் மனதினில்காமம் குறைவற நிறைந்த
தாலே

களிப்பவர் கள்ளுண்பது போலே-காமம்
வெளிப்படும் வேளைதொறும் மேலே-இன்பம்
செழிப்பது கொஞ்சமோடி தோழி-ஊரார்
செய்தபழி நன்மையது வாழி-மனதில்

அச்சம் இருந்தது மறைந்து
துச்சம்பழியெனநினைந்து
நிச்சயம் வந்தெனையணைந்து
மெச்சிடுமமணமேபுரிந்து
தொட்டுயர் அன்பும் தருவார்
கிட்டுமென் இன்பம் பெறுவார் (ஒரு)

# 29. பிரிவாற்றாமை.

இன்பத்துப்பால். அதிகாரம்-116.
இராகம்-சகானா. தாளம்-ஆதி.

எடுப்பு.

செல்லாமை உண்டெனில் எமக்குரையும்—மற்று
வல்வரவு வாழ்வார் தமக்குரையும்-பிரிந்து (செல்)

தொடுப்பு,

செல்லாதீர் பிரிந்திடில் நில்லாதென்தேகம்
கல்லானதோ மனம் கைவருமோ இன்பம் (செல்)

படுப்பு.

துறைவன் துறந்தமை தூற்றுமே முன்கை
இறைஇறவாநின்ற வளையல்.

முடிப்பு.

திரைகடல் போன்றது வரையறுகாதல்
தீயோதொடில் சுடும் விடில் சுடுமேகாமம் (செல்)

சந்தம்.

உறுதிமொழி தந்தும் உணர்வொடு கலந்தும்
உருகும்நிலைகாண மனமிலையோ?
இறுகியணைந்துடல் உயிரென இணைந்தும்
சடுதியில் பிரிவது துயரலவோ?
பிரிவேன் என்றவர் பிரிவதனால்
தரியேன் எனதுயிர் தனிமையிலே
தடுப்பதாலுயிர் நிலைக்குமதனால்
விடுப்பதேநலம் பிரிக்கும் நினைவதை (செல்)

# 30. படர் மெலிந்திரங்கல்.

இன்பத்துப்பால். அதிகாரம்-117.

இராகம்-சாமா. தாளம்-அடை.

எடுப்பு.

மறைக்கவும் முடியாத நோயடியே-அவர்க்கு
உரைக்கவும் முடியாது என்செய்வேன் பாங்கி
(மறை)

தொடுப்பு.

நிறைக்கவோ நெஞ்சில் நெருப்பன்ன காதலை
நீளவோ என் துயர் நாணம் குலையவோ
நிந்தனையும் வந்திடுமோ
நொந்தமனம் வெந்திடுமோ (மறை)

படுப்பு.

காமக்கடும்புனல் நீந்திக்கரைகாணேன்
யாமத்தும்யானே உள்ளேனடி.

முடிப்பு.

தேமதுரத்துயில் கொள்ளா இரவுக்கு
நானல்லால்துணை யாருமில்லையடி
தாமதாய்ப் போமிரவு
எமனுடை வாகனமோ (மறை)

சந்தம்.

கண்ணின்கொதி நீராலவர் பாதம்கழுவேனோ
காமக்கடல் நீந்தப்புணை ஏதும்கிடையாதோ
நட்புக்கிதுதானழகோ பகையானாலெப்படியோ
தப்பிடுமோ என்காதல் தயவுடன்நீசெப்படியே
(மறை)

## 31. கண்விதுப்பழிதல்.

இன்பத்துப்பால். அதிகாரம்-118.

இராகம்-முகாரி. தாளம்-சாபு.

எடுப்பு.

என்னரும் கண்களே அழுவதேனோ-துயர்
இன்னமும் நீர்படவேண்டும்
அன்னவரைக் காட்டிய (என்)

தொடுப்பு.

முன்னிலைகொண்டுவந்து மூளவைத்தீர் காதலை
என்னிலைக்கிரங்கியே இன்றேன் கலங்குறீர் (என்)

படுப்பு.

ஓ இனிதே எமக்கிந் நோய்செய்த கண்கள்
தாம் இதற்பட்டதுவும் பொருத்தமே.

முடிப்பு.

காதலரைப்பிரிந்தாலும் தூங்குவதில்லையே
கண்ணெதிர்வந்தபின்னும் தூங்குவதில்லையே
(என்)

சந்தம்.

அன்றவர் முகமதை நன்குறக்காட்டினீர்
இன்றவர் பிரிந்தே போயினுர்
நன்றென நிலையினில் நின்றுவிடாமலே
என்னையே காட்டவும் கேட்குறீர்
இப்படியும் பிரிவின் துயரம்
எப்படியும் வருமென றுணரா
மைப்படியும் கருநல் விழிகாள்
சொற்படியே நடவார் கினைவால் (என்

# 32. பசப்புறு பருவரல்.

இன்பத்துப்பால். அதிகாரம்-119
இராகம்-பேகாக். தாளம்-ஆதி

எடுப்பு.

பசலையோ பசலை பூத்ததென் மேனி
பாரடிதோழி யாரிடம்சொல்வேன் (பச)

தொடுப்பு.

குசலம்பேசியன் று விடைபெற்றுச்சென்றார்
குமைத்திடும் பிரிவினால் பதைத்துள்நொந்தேன்
(பச)

படுப்பு.

சாயலும்நாணமும் கொண்டார்கைம்மாறாய்
நோயும்பசலையும் கொடுத்தவரே.

முடிப்பு.

காயமொடாவியும் கரைந்திடலாச்சுதே
கருத்தினில்நிறைந்தவர் வருத்திடத்துணிவதோ
(பச)

சந்தம்.

சொல்லக்கூசுது நெஞ்சமடி-யவர்
சுகமதில் இன்பம் மிஞ்சுமடி
புல்லிக்கிடந்தேன் நானவரை-விட்டுப்
புடைபெயர்ந்தேன் இதைக்கேளடி.
அள்ளிச்சென்றிட வந்ததுபோல்
துள்ளி வந்ததே பசலையடி
அத்தகுநிலையினை எனக்களித்தவர்
வைத்திடு பழியதை ஊரறியாதடி (பச)

## 33. தனிப்படர் மிகுதி.

இன்பத்துப்பால். அதிகாரம்-120

இராகம்-ஆனந்தபைரவி. தாளம்-ரூபகம்.

எடுப்பு.

வாழ்வார்க்கு வானம் பெய்வதுபோல்
வீழ்வார்க்கு வீழ்வார் புரியும் மெய்யன்பு (வாழ்)

தொடுப்பு.

தாழ்வல்லவோ இன்பம் யான்மட்டும்விழைதல்
தனித்தவாழ்விது இனிக்குமோகூறடி
தரமாகுமோ பிரிவானது
தணியாதடி தீயாமிது (வாழ்)

படுப்பு.

ஒருதலைக்காமம் இன்னாதுகாவடிபோல்
இருதலையானும் இனிதாகும்

முடிப்பு.

பருவரலும்பைதலும் இருவர்க்குமல்லவோ
படுபாவி காமனின் அடுபோரிதழகோ
பதருதவர் துயராமிதை
நுகராதவர் செயலாமிது (வாழ்)

சந்தம்

இன்சொல்புகல் மணவாளரின்
தன்சொல்லதை சுவையாமலே
இருப்பதோ—கண்ணீர்—உகுப்பதோ
அன்புற்றவர் செயலோயிது
ஆயினுமவர் குணமாநலம்
செவியுற்றதும் சிந்தைகளி
மகிழ்வுற்றது மறவேனடி (வாழ்)

## திருக்குறள் கருத்துக்களை பாடிப் பரப்புதற்கு.........

திருக்குறளின் கருத்துக்கள் இசைப் பாடல்களாக இந்நூலில் அமைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு வகையான இராகத்திலும், தாளத்திலும் இணைத்து எடுப்பு, தொடுப்பு, படுப்பு, முடிப்பு, சந்தம் என்ற முறையில் வகுத்து அமைக்கப்பட்டுள்ளன.

திருக்குறளின் கருத்துக்களை இசையோடு பாடி நாடெங்கும் பரப்புவதற்கு இப்பாடல்கள் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இப்பாடல்கள் ஒவ்வோர் இசையரங்கிலும் பாடப்பட வேண்டும் என்று விரும்புகிறோம்.

இவ்விசைப் பாடல்களை அமைத்த திரு. ப. கண்ணனார் அவர்களின் அருந் திறனையும், இதன் வாயிலாகச் செய் துள்ள தொண்டினையும் பாராட்டு கிறோம்.

—"கலைக்கதிர்"
அக்டோபர்-67.

செந்தமிழ் அச்சகம், சலகண்டபுரம்.